# செப்டம்பர் – 15 – சனி

## தூய வியாகுல அன்னை

**“சிலுவையின் அருகில் இயேசுவின் தாய் நின்று கொண்டிருந்தார்” யோவா.19:25**

### முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 10 : 14 – 22

என் அன்புக்குரியவர்களே, சிலைவழிபாட்டை விட்டுவிலகுங்கள். உங்களை அறிவாளிகள் என மதித்துப்பேசுகிறேன். நான் சொல்வதைக் குறித்து நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம். இஸ்ரயேல் மக்களின் சடங்கு முறைகளைப் பாருங்கள். பலிப்பொருட்களை உண்கிறவர்கள் பலிக்குப் படைக்கப்பட்ட பலிபீடம் குறிக்கும் கடவுளோடு உறவு கொள்ள வில்லையா? எனவே சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றை அல்லது சிலைகளைப் பொருட்படுத்தவேண்டும் என்றா சொல்லுகிறேன்? மாறாக, சிலைகளுக்குப் பலியிடப்பட்டவை கடவுளுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடப்பட்டவையாகும். நீங்கள் பேய்களோடு உறவுகொள்வதை நான் விரும்பவில்லை. நீங்கள் ஆண்டவருடைய கிண்ணத்திலும் பேய்களுடைய கிண்ணத்திலும் பருக முடியாது. நீங்கள் ஆண்டவரின் பந்தியிலும் பேய்களின் பந்தியிலும் பங்குகொள்ள முடியாது. நாம் ஆண்டவருக்கு எரிச்சலூட்டலாமா? நாம் அவரைவிட வலிமை மிக்கவர்களா?

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது முகத்தின் ஒளி அடியேன்
மீது வீசச்செய்யும்

### நற்செய்தி : லூக்கா 2 : 33 – 35

அக்காலத்தில் குழந்தையைக் குறித்துக் கூறியவை பற்றி அதன் தாயும் தந்தையும் வியப்புற்றனர். சிமியோன் அவர்களுக்கு ஆசிகூறி, அதன் தாயாகிய மரியாவை நோக்கி, ”இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாள மாகவும் இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” என்றார்.

**தியானம்:** தியாகமில்லாமல் அன்பு செய்ய முடியாது, இழக்காமல், துன்பங்களை அனுபவிக்காமல் தியாகம் செய்ய முடியாது. இழப்பில்தான், வலிகளை தாங்கிக் கொள்வதில்தான் அன்பின் உச்சம் நமக்கு வெளிப்படுத்தப்படுகின்றது. கடவுளின் அன்பு இயேசுவை இந்த உலகிற்கு அனுப்பியதில் வெளிப்பட்டது, இயேசுவின் அன்பு அவர் சிலுவையில் நமக்காக துன்பங்களையும், சித்திரவதைகளையும் அனுபவித்து இறந்ததில் காணப்பட்டது, அதேபோல அன்னை மரியாளுடைய அன்பு தான் பெற்றெடுத்த மகனையே இந்த உலகத்திற்காக அர்ப்பணித்து அவரோடு சிலுவையின் சித்திரவதைகளை தன் இதயத்தில் தாங்கியதில் வெளிப்பட்டது. ஆகவேதான் “உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும்” (லூக்.2:35) என்ற சிமியோனின் முன்னறிவிப்பில் அது வெளிப்படுத்தப்பட்டது. இதையே புனித பெர்நாட் இவ்வாறு சொல்லுகிறார், எங்களுடைய மீட்புக்காக சிலுவையில் மட்டும் இரத்தம் சிந்தப்படவில்லை மாறாக உமது இதயத்திலும் சிந்தப்பட்டது. மாசில்லா தாயே உம்முடைய இதய அன்பால் எங்களை மூடிக்கொள்ளும்” என்று. எனவேதான் திருச்சிலுவையின் மகிமையின் நாளுக்கு அடுத்தநாள் மரியாளின் வியாகுலத்தை தியானிக்க திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. திருச்சபையின் மரபுப்படி அன்னை மரியாள் ஏழு வியாகுலங்களை தன் இதயத்தில் அனுபவித்தாள் என்று சொல்லப்படுகின்றது. 1.சிமியோனின் முன்னறிவிப்பின் போது (லூக்.2:35) 2.குழந்தையைத் தூக்கிக் கொண்டு எகிப்துக்கு ஓடிச் சென்றபோது (மத்.2:13) 3.காணாமல்போன இயேசுவை கோவிலில் கண்டுபிடித்த போது (லூக்.2:48) 4.சிலுவை சுமந்து சென்ற இயேசுவை வழியில் சந்தித்த போது 5.இயேசுவின் சிலுவையின் அடியில் நின்ற போது (யோவா.19:25) 6..இறந்த இயேசுவை அவர் மடியில் சுமந்த போது 7.இயேசுவை அடக்கம் செய்த போது, அன்னை மரியாளின் இதயம் குத்திக் கிழிக்கப்பட்டது என்று குறிப்பிட்டு அடையாளம் காட்டப்படுகின்றது. உண்மையில் அவருடைய இதயம் பலமுறை குத்தப்பட்டு காயப்படுத்தப்பட்டிருந்தாலும் இந்த ஏழு வியாகுலங்கள் திருச்சபையால் நமக்கு அடையாளம் காட்டப்படுபவை. தூய இரண்டாம் ஜான்பால் வியாகுல அன்னையைப் பற்றி கூறும்போது “பெத்தலகேம் முதல் கல்வாரி வரை துன்பங்களை அனுபவித்த அன்னை மரியாள், நம்முடைய துன்பங்களை அறிந்தவர்களாக இருக்கின்றார். ஏனெனில் நம்முடைய வேதனையை, துன்பங்களை தன்னுடைய வாழ்க்கையில் அனுபவித்ததால் நம்முடைய வேதனையை அறிந்து உதவுபவளாக வலம் வருகிறார். அன்னை மரியாள் நமக்கும் தாய். பிள்ளையினுடைய உணர்வுகளை அறிந்து உதவிடும் தாயாக இந்த தாய் இருக்கிறாள்” அப்பேற்பட்ட உன்னதமான தாயை அதிகம் அதிகமாக அன்பு செய்து, இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவர்களின் பரிந்துரையை நாடி நம் துன்பங்களில் இருந்தும் பாவ நாட்டங்களிலிருந்தும் விடுதலை பெறுவோம்.